தொத்தித் திருமலை, துதிக்க அழியுமையா! சொல்லே!

6) என்செயல் புரிகுருன், ஏழுமலை நித்தநித்தம்;
முன்செயல் பாரமூட்டை அகற்றி நின்றுனே;
பின்செயல் எனதோ பிழையும் எனதல்ல;
"உன்செயல் ஹரியே உழைக்குருய் எனக்கென்றே!"

7) குரல்மயக்கும் குமரியின் கூர்முலை மயக்கும்
புறம்மயக்கும் கருவிழிப் போதை மயக்கும்
நரர்மயக்கும் சுரர்மயக் குமிவை,உள் ளன்பால்
பரத்திருமா மலைத்திருப் பதிகண்டோர் மயக்காதே!

8) தரணீ தரன்கற் சிலைஉருத் தரித்துத் திருமலையில்
பரச்சு கமாய்திருப் பதியாயச் சிகர்மேல் வீற்றிருக்கான்
நரனே, நலன்தரும் நாரணனைக் காணிப்பூ வைகுண்டம்,
மறந்தால் பக்திஅறம் மாசிலைதான் காண்பாய்! எச்சரிக்கை!

9) குறைசொல்லிப் பயனென் கூர்வினை படுத்துங்கால்
[5]மறைசொல்லும் வைகுண்டன் மாமலை வீற்றிருக்க?
[1]பறைகொட்டிப் [2]பணம்பொருளால் பார்க்காதே [3]திருப்பதியான்
முறையிட்டுக் கரைந்தழுதால் [4]முவ்வினைதா னென்செய்யும்?

---

(1), (2). பணம் பொருள் தருவதை பெருமையாய் விளம்பரம் செய்து. (3) திருப்பதியானை. (4) சஞ்சித, ஆகாம்யம், ப்ராரப்தம். (5) வேதத்தால் முறையிடப்பட்ட.

10) நம்பிடா இவ்வுலகு நலனிழந் தலறுதையோ!
கும்பிடாப் பாமரர், கோவிந்தா வென்றெஞ்சார்,
வம்பிழி தடிநாக்கர், வரதனைக் கூவிடார்தான்,
துன்பழி திருப்பதியைத் துதித்தாலுய் யுமேஉலகு!

11) குன்று வழகன் கோதண்ட ராமனு யவதரித்தான்,
நின்றான் சிலைபோல் நீண்டுருவாய் நாரணன் திருமலையில்,
கன்று சுந்தரன் கதறிட மாயையால் வதைந்தழிந்தே,
நின்றான், உளத்தில் நினைவழித்தே அறிவாய், திருப்பதியான்!

12) மாரனடித் திழுக்கமாயை வதைத்தொழிக்க இவன்பார்க்க
நாரணனுக் கிரக்கமில்லை நாரிநகரகற்றி நிற்றலாலே?
தாரமிவன் நாயகியே.தாயே லக்ஷ்மியே, கோபமெழக்
காரமதாய் என்சொன்னாய்? காக்கச்சொல் திருப்பதியை.

10. "திருவேங்கட ஏகாதசம்"

1) கனப்பெரு ஜென்மம் காணத் [1]திருவடி வந்ததே!
தினம்புகழ் பற்றி, திகைக்கும் இகத்தை [2]மறப்பதே!
தனம்பெயர் பெண்ணும் தருமா இழியா சுகநிலை?
வனத்திரு மலையில் வாழென் திருமால் சரணடை!

(1). திருமாலின் திருவடி. (2). மறந்து நிற்பதே வழி.

2) கனச்சுகம் களித்தே [1]கதையான் பற்றியோர் காணேன்!
[3]பிணச்சுகம் [2]பொருள்பெண் [4]பிழைத்தே, இதிலெதோ கண்டீர்!
மணக்குவ னமாலி மாஏ [5]ழுசிகரத் தானை,
[6]தனக்கென இல்லா [7]தழித்து, [8]தண்டனிட் டுக்காண்!

---

(1). கதையானை, கதைதரித்தவனை. (2). பொருள் பெண் மோகத்தால், தீண்டுதலால் கிடைக்கக்கூடிய. (3). பிணமாக்கும் சுகத்தில் (4). வாழ்ந்தே. (5). திருப்பதி வேங்கடன். (6). தனக்கு, தனக்கென்று சேர்க்கும் அபிமானத்தை. (7). ஒழித்து, வெறுத்து, துறவடைந்து. (8). சரணாகதியடைந்து.

3) எண்ணத் தொலையா ஏழுமலை யான்கா ணஏறும் படிகள்,
எண்ணித் திரா ஏழையான் கடந்த ஜென்மப் படிகள்,
கண்ணில் ஒளியாய் கருமணியாய் காட்டி நின்றான் படிகள்
விண்ணும் இவன்சேர் வீழ்த்திட்டு வீணை, துறவைப் பிடித்தே!

4) தனம்திரள் திரளாய் திரட்டியோர் தந்தும் தன்னை, அழியும்
தனமதால் காணார், என்றே, தயைஇல் சிலைபோல் நின்றான்.
தனக்கர சியாம்ஸ்ரீ தேவியே, தணிந்த பணிப்பெண் ணாக,
தனம்கொடுத் தேஇத் திருமால் தயைதேடு மடமை என்னே!

5) படித்துப் படித்துப் பலஜென்ம மழித்துப் [1]பார்த்தீர்?
படித்தே பற்றப் பார்வதியா ளண்ணன் என்ன
படிக்கும் ஏடா? படிஎட்டாம் யோகம் பற்றி,
இடித்தால் உளத்துள் இகவாசை, காண்பீர் பெருமாள்.

(1). பார்த்தீரா, ப்ரத்யக்ஷமாகக் கண்டீரா இவனை.

6) சிரிக்கின் றானே சிறுபொ ருளளிக்கக் கண்டு,
நெறிக்கின் றானே பற்கள், நெறிதவறி பணத்தை
பறித்தார், [1]சுகத்தைப் பறிக்க, கொடுக்கும்மண் கொடைக்கு
தரித்தால் [2]பெருமாள் நாரா யணனென்றே, வருவான்!

(1). இக சுகத்தை. (2). பெருமாளின் உருவை இதயத்தில் தாரணை சேர்ந்த ஜப யோகத்தால்.

7) மறுபடி பிறந்திடா மருந்தைத் துறவால் பெறவோ,
கருசிலை போலிவன், காடு மலைமே லூன்றி.
நறுமலர் நாரியும் நகரு மொழித்தே நின்றான்,
மருவுவீர் திருப்பதி மலையன், மறந்தா லாசை.

8) தொழுதேன், பொருளில்லான் தொண்டியற்ற அறியாண்,
அழுதேன், கண்ணீரே அரும்கொடையென் றளித்து,
"பழுதோ பிறவி,திருப் பதி,ஹரியே!" என்றேன்
"எழுவா!!" என்றுதித்தான், ஏழுமலை உளமே!

9) வந்தேனே னிவ்வுலகு வாழுமுயர் மலையா சொல்லீடையே
"தந்தேனே இன்றே, தயங்காதே!" என்ற குருவாக்கும்,
"வந்தேனே!" என்றநின் நாற்கரத்தா வாக்கும்
பொய்த்திடவோ!
சொன்னேனே, மறக்காதே சோதியற்ற லிறப்பே னென்றேனா!

10) திருமலை ஏறவில்லை திருப்பதி நாதன் காண,
பருவினை சிறுசுகம் கழிந்தஉன் இதயமென் திருப்பதி,
நறுமண முன்பா மாலை நானணிந்தேன்!" என்றான்.
வெறுமன மேற்றயென் வேங்கடன் கருணை என்னே!

11) மாமலையான் போற்றி! மதுரையாள் அண்ணன் போற்றி!
கோமளையென் ஸ்ரீதேவி கோவிந்தன் போற்றி போற்றி!
பூமனத்தான் போற்றி! புங்கவர் களிமன்னன் போற்றி!
தாமதமுக் குணம்கொல் தாள்திருசுந் தரனெந்தை போற்றி!

---

(2) பஜனைகள்

1. ராகம்: நாதநாமக்ரியை "திருப்பதிஎட்டு" ஏகதாளம்.

	மா மம கா	மா மம கா	மா பத பா	மா பா
1)	ஸ்ரீ தரனே	ஸ்ரீ ஹரியே	ஸ்ரீ பதியே	வா வா
	பாத ப மா	கமகரிஸா	க ம ம க ரீ	கரிஸா
	ஆத ரவே	திருமலையா	அருள்நிறைவே	வா வா
	பா ப பதா	பா த நி ஸா	ஸா ரிஸநி	ஸரி ஸா
2)	பூதஉ டல்	பற்றொழிய	பூபதியே	வா வா
	ஸாரிக மா	கரி ஸ் நி ஸா	ஸா நிதபா	தபமா
	பாத மிரு	பரசுகத்தை	பண்புறவே	தா வா

---

1) ஸ்ரீதரனே ஸ்ரீஹரியே ஸ்ரீபதியே வாவா
ஆதரவே திருமலையா அருள்நிறைவே வாவா
2) பூதஉடல் பற்றொழிய பூபதியே வாவா
பாதமிரு பரசுகத்தை பண்புறவே தாவா
3) காதவழி நடந்துஉனை காண்பதென்ப தறியேன்
நாதாஹரி என்னுளத்தில் நாடினேனே வாவா
4) போதமருள் புங்கவனே புதைத்திடாதே இகத்தில்
நாதனில்லான் நலமறியான் நாதனேநீ காவா
5) ஓதிசதுர் வேதங்களை உய்யும்வழி அறியான்
போதினனக் காதிமூலா புகழ்பொழிய என்றும்
6) நாற்கரத்தா சங்குசக்ரா நாமபெரு மலையா
தோல்வியில்லா தெந்தன்தவம் தோன்றிஎன்முன் காவா
7) மாற்றறியா மாசுமில்லா மாஹரிநல் பொன்னே
வீற்றிருக்காய் திருப்பதியில் வீரத்துறவை விளக்கி
8) காற்றடக்கி கால்மடக்கி கடுந்தவத்தால் காணூர்
தோற்றுபாசம் துதித்தழுவே தோன்றுவாய்நீ ரமணு

---

2. ராகம்: குறிஞ்சி (மத்யமச்ருதி) தாளம் ரூபகம்

ஸஸ ரிஸ	நிநி நீநி	ஸா ரீ	ஸரிகாமா	கரிஸாஸ	ரிநிஸா
திருப்பதி	உள்ப்பதி	வாவா —	திரும்பவும்	பிறவேன்	ரமணு
மமமாம	மமகாம	பாபா	மபதாத	தநிதாப	மபபா
கருசிலை	நறுமண	மாலை —	களியுரு	ஒளிசுக	வரதா
பபபாப	தத ஸ்ஸ	நிதபா —	மபாதாபா	மகரீஸ	ரீ ஸா
மறுபடி	யுளத்தினில்	காண்வா	மலர்ந்தருள்	ஒருமொழி	விடுக்க

---

1) திருப்பதி உளப்பதி வாவா — திரும்பவும் பிறவேன் ரமணு
2) கருசிலை நறுமண மாலை — களியுரு ஒளிசுக வரதா
3) மறுபடி யுளத்தினில் காண்வா — மலர்ந்தருள் ஒருமொழி விடுக்க

4) கருவிழி மாதரால் பட்டேன், இனி — கலங்கிடா தெந்தனை காவா

5) ஹரிஹரி கோவிந்த ரமணா — அருளிடு புகழ்ந்திட உன்னை

6) திருமார்பில் துளசியை அணிந்தாய் — திருமாலே நின்கருணை தான் என்னே

7) நரருனை தரிசித்து மீள — நாடினுய் புவிகுன்றம் ஹரியே

8) வருந்திடும் உளங்கள்தான் மலர — வரம்தந்தே களியருள் முகுந்தா.

---

3. ராகம்: நாதனுமக்ரியை ஏகதாளம்.

வேங்கட ரமணன் விண்களி ரமணன் — விண்ணொளி ரமணன் வீழ்ந்தவர் காவலன்.

வெண்ணுடை நாமம் தரித்தளன் ரமணன் — வெல்லும் வல்வினை வேடிக்கை ரமணன்.

நீ நி நி ஸா ஸ ஸ ரி ரி ரீ ரீ ஸ ஸ

1) கோவிந்த கோவிந்த — ஹரி நாராயண
கா ம ம கா ரீ கா ரி ஸ நி ஸ ஸ

நாவிந்த நாமம் — நாளிருள் தொனிவா
கா மா க ரி ஸா ஸரிஸநி ஸா ஸா

2) சர்ப்பம் படுத்தோய் — சங்கடம் தீர்ப்போய்
கா மா ம க க ரி ஸரி ஸநி ஸஸஸஸ

கர்ப்பம் புகுத்ததேன் — கதைதரா திருப்பதி

---

1)	கோவிந்த	கோவிந்த	—	ஹரி	நாராயண
	நாவிந்த	நாமம்	—	நாளிருள்	தொனிவா
2)	சர்ப்பம்	படுத்தோய்	—	சங்கடம்	தீர்ப்போய்
	கர்ப்பம்	புகுத்ததேன்	—	கதைதரா	திருப்பதி
3)	அர்ப்பச்	செயலார்	—	அடையார்	திருமலை
	நிற்கச்	செயலற	—	நிலைப்பார்	வேங்கடன்
4)	ஸ்ரீதர	கேசவ	—	ஸ்ரீனி	வாசா
	ஆதர	விவனுளம்	—	ஆழ்வோன்	திருப்பதி
5)	எட்டுப்	படியால்	—	கிட்டுவான்	திருப்பதி
	கட்டுப்	படியேறி	—	காணுர்	திருமலை
6)	விட்டுச்	சுட்டால்	—	விளங்கும்	திருப்பதி
	துட்டால்	பட்டால்	—	எட்டார்	மாமலை
7)	கட்டிப்பிடி	ஒளி	—	காணும்	வேங்கடன்
	விட்டே	யுளத்தில்	—	வினைசுக	மெல்லாம்
8)	எட்டாய்	சிறுசுகம்	—	எட்டவே	வேங்கடன்
	விட்டால்	பாசம்	—	விளங்குவான்	திருமலை.

---

(3) கோஷ்டி கீதம்

ராகம்: புன்னுகவராளி தாளம்: ஆதி

பல்லவி

ஸரீரிஸா ஸா நீ ஸமகரிஸா – ஸமமம மபமகரிஸ ஸரிஸநீ
திருஉளம் யாதோ அறியேனே – திருப்பதி வேங்கட ரமணு
ஸகரி ஸநீ ஸகா கரிஸா கமா மபமகாரி ரிகாமப
உருகுறேனே உளம் கறைந்தே – உனைக்காணு துயரெனை
மபமகரிஸ
வாட்டவே

அநுபல்லவி

மமமமாபமகாரிகமா பமபா மா கமாமமா பா ப தா பம பா
திருமாலே பாற்கடலா, உன் – திருமுகம் யான் காண்பதெப்போ
பபா பபா பபாதஸிஸா ஸிஸ்ரிஸ்ாஸிதபா மபா தபா மகாரிஸா,
சிறுவனிச் சுந்தரன் சேயல்லவோ – சிதைப்பதுமிவனை
ஸமா கரிஸா
அழகாமோ

(சரணத்தையும், பல்லவி அனுபல்லவி போல் பாடவும்)

பல்லவி

திருஉளம் யாதோ அறியேனே — திருப்பதி வேங்கட ரமணு
உருகுறேனே உளம் கரைந்தே — உனைக் காணு துயரெனை
வாட்டவே

அநுபல்லவி

திருமாலே பாற்கடலா, உன் — திருமுகம் யான் காண்ப தெப்போ
சிறுவனிச் சுந்தரன் சேயல்லவோ — சிதைப்பது மிவனை
அழகாமோ

சரணம்

மறுபடி பிறக்கும் கொடு வினைகள் — மருமுறை இயற்றேன்
மலைரமணு
சிறுசுகங்கள் அறுத்தெறிந்தேன் இனி — சினந்திடநீ சொல்
ஏதுளதோ.
ஒரு தரமே திருவடிநல் — உளம் களிக்க காட்டிடையே
குருபரனின் மாமனே ஓ! — குணமிலா என்செய லேதுளதோ.

பகுதி [3] ஸ்ரீராமம்

(1) பஜனை

ராகம்: சங்கராபரணம் மத்யமச்ருதி ஏகதாளம்

ஸாஸா ஸாஸா நி ஸரிஸ நிதபா
சீதா ராமா ஜெயஜெய ராமா
காகா மாகரிஸரிக காகம கரிஸா
போதா ராமாமுனி புங்கவ ராமா

மாமா மாமக கமபத நிதபா
நாதா சீதா நாரண ராமா
தாதா நிதபமா கபமக கரிஸா
வேதா திதா வெல்வினை ராமா

---

1) சீதா ராமா ஜெயஜெய ராமா
போதா ராமமுனி புங்கவ ராமா
நாதா சீதா நாரண ராமா
வேதா திதா வெல்வினை ராமா

2) ஹரிஹரி ராமா ஹரப்ரிய ராமா
துரிதமாய் தந்திடு திருவடி ராமா
பரிநரி யாக்கிய பரசிவன் பூஜித்தாய்
எரித்திடு உழ்வினை ஏழைநான் ராமா

3) குண்டல ஸ்யாமள கோதண்ட ராமா
அண்டம் பிண்டங்கள் ஆள்வோய் ராமா
தண்டை சிலம்பணிந்த தாள்சிறு ராமா
அண்டை வந்தணை ஆபால ராமா

4) வற்றிடா அன்பாய் வளருளம் ராமா
கற்றறி யாயெனை காவா ராமா
சொற்றிற மற்றேன் ஜோதியா ராமா
பற்றிடப் பரமில்லை பகர்வா ராமா

5) கொண்டையில் பூமுத்து குழந்தை ராமா
பண்பிகம் பரம்தரும் பாதா ராமா
கண்ணே ராமா கருத்தே ராமா
விண்ணே ராமா வீரனே ராமா

6) சின்மயா னந்தா ஸ்ரீரகு ராமா
அன்புயர் ஆழிநல் அலையிலா ராமா
நொந்தேன் நொந்தேன் நுழைந்தேன் கருபல
வெந்தேன் புலனுசை வேண்டேன் ராமா

7) உருவே ராமா உளமே ராமா
திருவே உயிரே தெம்பே ராமா
கருப்புகு ராதெனை காப்பாய் ராமா
பொறுப்பிதற் குனதே புத்தனே ராமா

8) ராமா ராகவ ராஜா ராமா
நாமா அம்ருதா நம்பினேன் ராமா
தாரக ராமா தஞ்சம் ராமா
பூரக ரேசகம் புரிவதேன் ராமா

9) ராவணன் கொன்றனன் ரகுகுல ராமா
காவலா தர்மங்கள் கருணனே ராமா
காஞ்சன காமினிக் காட்டினில் ராமா
தாங்கிகா எந்தனை தசரத ராமா

10) தந்திடு வந்துடன் தானமா யுனதன்பு
கொண்டிடு ராமா குற்றங்கள் மறந்தே
சித்துரு ராமா சீதா ராமா
பற்றிடா திகமெனை பார்த்தருள் ராமா

11)	திறந்திடேன்	அகத்தை	தீரநல்	துறவிற்கே
	அறமூளோர்	சுரர்களின்	அபயமே	ராமா
	மறந்திடாய்	சுந்தரன்	மாதவம்	அறியேன்
	பிறந்திடா	தினிஇகம்	வரம்தா	ராமா
12)	திகைத்திடேன்	ராமா	திரிந்திடேன்தீ	தற்றேன்
	பகைத்திடே	ளிழித்திடேன்	பாதம்தா	ராமா
	வகையறி	யேன்யான்	வாழஉன்	னடிராமா
	நகைத்திடா	துலகத்தோர்	நாட்டிடு	பரசுகம்
13)	கோசலை	ராமா	கௌஸ்துப	தாரியே
	வாசனை	மனதினுள்	வளர்ந்திடா	தழித்திடு
	மோசம்	போனேன்	முக்தியும்	மறந்தேன்
	தாசன்யான்	ராமா	தந்தடி	மீட்பாய்
14)	சபரியின்	ராமா	சாதுக்கள்	ராமா
	அபயம்	ராமா	அளித்திடே	ராமா
	அபசாரம்	மறந்தாழ்த்தி	ஒருநிலை	சுந்தரன்
	உபகரி	ராமா	உருவிலா	ஞானம்.

---

(2) சுந்தர ராமாயண நாமாவளி

ராகம் : சங்கராபரணம் ஏகதாளம.

பால காண்டம்

	ஸ்ஸ்ஸ்ஸ	ஸ்ஸ்ஸ்ஸ்	நிரிஸ்நி	தாதா
1.	அசல	நிற்குண	ஆத்மா	ராமா
	ரீரிரி ரீ	ரிஸ்ரி	க்ம்க்ரி	ஸ்ாஸ்ா
2.	ஆனந்த	பாற்கடல்	அறிதுயில்	ராமா
	கா கா	காகக	க்ாக்ரி	காமா
3.	இந்திர	தேவர்கள்	வேண்டுற	ராமா
	ரீரிரி	ரீஸ்ரி	க்ம்க்ரி	ஸ்ாஸ்ா
4.	இகத்தில்	அசுரரை	அழித்திட	ராமா

5. பரத லக்ஷ்மண சத்ருக்னர் ராமா
6. கூடவே பிறந்திடு தசரத ராமா
7. ஆடக் கூனியை மொத்திநீ ராமா
8. விஸ்வா மித்திரன் கூவலும் ராமா
9. கூடிச் சென்று கற்றனை ராமா
10. யாகமுந் தபசும் ரக்ஷிக்க ராமா
11. சுபாஹோ டசுரர் தாடகை ராமா
12. லக்ஷ்மண னுதவியின் வெட்டிய ராமா
13. முனிகள் துதிக்கத் தங்கிய ராமா
14. மூர்க்கர் அண்டாது காத்தவோ ராமா
15. பாலப் பருவம் கடந்திட்ட ராமா
16. பக்தன் ஞானி ஜனகன் ராமா
17. மகளா முலகத் தாயவள் ராமா
18. ஸ்வயம் வரத்திற்கே நடந்தாய் ராமா
19. கல்லாய்ச் சமைந்த காரிகை ராமா

20. காலின் தூளிபட்டெழுந்தனன் ராமா
21. மிதிலை ஸ்வயம்வர சபைசேர ராமா
22. முறித்தே வில்லை ஜயங்கொள் ராமா
23. ஜானகி பற்றினை மணந்தாய் ராமா
24. பரசு ராமன் பலம்பறி ராமா
25. அயோத்தி யடைந்த சுந்தர ராமா

அயோத்யா காண்டம்

26. பண்டைப் பகைகூனி தூண்டிட ராமா
27. கைகேயி காட்டிற் போக்கவே ராமா
28. தந்தை வாக்கைக் காத்திட ராமா
29. சென்றாய் லக்ஷ்மண சீதா ராமா
30. குஹனைத் தழுவி நண்புற ராமா
31. ரிஷிகள் ஆச்ரமம் உறைந்தவோ ராமா
32. தசரதன் மாளப் பரதனும் ராமா
33. சித்திர கூடம் அடைந்தனை ராமா
34. சுந்தரப் பாதுகை தந்தனை ராமா

ஆரண்ய காண்டம்

35. தென் திசை அரண்யம் புகுந்தனை ராமா
36. முனிவர் பலர்முன் தோன்றினை ராமா
37. துஷ்ட விராதனைக் கொன்றனை ராமா
38. அகஸ்தியர் தமிழ்முனி ஆண்டநல் ராமா
39. பஞ்ச வடித்தவம் புரிந்தனை ராமா
40. சூர்ப்ப நகைபங்கம் அடைந்தனள் ராமா
41. கரதூஷணர்கள் அழிந்தனர் ராமா
42. ராவணத் துறவி சீதையை ராமா
43. மாயமாய் அகற்றிட அலைந்தனை ராமா
44 தீண்டாச் சபரிகை விருந்துண் ராமா
45 கபந்தனைக் கண்டஞ்செய் சுந்தர ராமா

கிஷ்கிந்தா காண்டம்

46. அநுமசுக் ரீவர்க் கஞ்சலாம் ராமா
47. அகந்தை வாலியைக் கொன்றுமே ராமா
48. தம்பிக்கே பட்டம் கட்டினாய் ராமா
49 வானரச் சூரன் ஹனுமான் ராமா
50. தூதனாய்ச் செல்ல ஏவின ராமா
51. கணையாழி அடையாளம் தந்தனை ராமா
52. அங்கதன் ஜாம்பவர் தேடினர் ராமா
53. ஜடாயுமுன் சம்பாதி சொன்னான் ராமா
54. கன்னியா குமரியின் மலைமேல் ராமா
55. சுந்தரன் ஹனுமான் நின்றான் ராமா

சுந்தர காண்டம்

56. வானரன் வாரியைத் தாவினான் ராமா
57. லங்கிணி கிழித்து லங்கையுள் ராமா

58. நாமத்தின் மகிமையால் நுழைந்தனன் ராமா
59. அசோகத்தில் வணங்கினுன் தேவியை ராமா
60. அணிகலம் களிக்கவே காட்டினுன் ராமா
61. ராவண அசுரனைத் தூஷித்தே ராமா
62. லங்கை தகித்துத் திரும்பினுன் ராமா
63. "கண்டேன் சீதையை" என்றனன் ராமா
64. சுந்தர முடிமணி தந்தனன் ராமா

யுத்த காண்டம்

65. வானர சைன்யம் திரண்டது ராமா
66. வாரிக் கரையில் சிந்தித்த ராமா
67. பங்கம் கடலரண் செய்திட்ட ராமா
68. விபீஷணன் சரணம் அடைந்தனன் ராமா
69. ஆழிக் கணையும் கட்டினை ராமா
70. அசுரன் கோட்டையைத் தகர்த்தே ராமா
71. தந்திரன் மேல்போர் தொடுத்தாய் ராமா
72. அநுமான் சஞ்சீவி தந்தனன் ராமா
73. கும்பகர்ணன் தலை வெட்டினை ராமா
74. இந்திர ஜித்தன் மடிந்தான் ராமா
75. அஹிமஹி ராவணர் அழித்தபின் ராமா
76. விடுத்துநின் ராம பாணத்தை ராமா
77. அம்ருதக் கவசம் பேதித்த ராமா
78. ராவணன் தலைகளை அறுத்தும் ராமா
79. இதயத்தில் முக்தி தந்தாய் ராமா
80. கண்டே சீதையை அணைந்தாய் ராமா
81. விபீஷணன் பட்டம் கட்டினை ராமா
82. சுந்தர விமானத்தில் திரும்பினை ராமா

உத்தர காண்டம்

83. பரதன் உயிரை காத்தனை ராமா
84. அயோத்தி புகுந்து குடிகளை ராமா
85. ஆனந்த வெள்ளத் தாழ்த்தினை ராமா
86. பட்டாபிஷேகம் கொண்டனை ராமா
87. பாரைப் பரம்செய்து ஆண்டனை ராமா
88. மாயப் பழிக்கே இணங்கிய ராமா
89. கர்ப்பிணி சீதையை அகற்றினை ராமா
90. காத்தனல் வால்மீகி களிக்கவே ராமா
91. லவகுசாள் சீதைக் குதித்தனர் ராமா
92. குதிரை யாகமும் நடந்ததே ராமா
93. கோமளை ஜானகி பூமிக்குள் ராமா
94. மறைந்தபின் வைகுண்டம் சேர்ந்தனள் ராமா
95. பட்டமும் விடுத்துப் போதனுய் ராமா
96. ஞானம் தந்தே நிற்கும்வை ராமா
97. துஷ்டர் அழியத் தோன்றிய ராமா
98. நல்லோர் காப்பும் அமைத்தபின் ராமா
99. பன்னக சயனனுய்ச் சென்ருய் ராமா
100. முனிவர் கதையும் முடிந்ததே ராமா

101. பணிவோர் தஞ்ச நாமமே ராமா
102. கதிரவ குலத்துத் திலகமே ராமா
103. பயமழி மங்கள புங்கவ ராமா
104. நரஹரி சுரமுனி நாரண ராமா
105. அற்புத மெய்ச்சுக கைவல்ய ராமா
106. ஹநுமா னிதயச் சுந்தர ராமா
107. ராம ராம ஜெய ராஜா ராமா
108. ராம ராம ஜெய சீதா ராமா

ஸ்ரீ சுந்தர ராமாம்ருதக் கவி

1) அறம்நெறி யழிந்து, அநீதி ஓங்கி அவனி யலற,
அறமுயர் முனியோ ரமரர் அகில நெறியோ ரஞ்சல்,
அறம்வள ராதி சேஷ சயன னெட்ட, அப்பன்,
அறம்மறை யகிலம் காக்க, அருளுட லெடுத்தவ தரித்தான்.

2) மணம்முடித் தாயி ரமாயிரம் மனமுவந்தே—இல்லறத்தில்
வணங்கியத் திருமால், வாழ்ந்தும் தசரதன யோத்தியிலே,
பணம்பொருள் பாராள் அரசு பயன்படவே, மகரில்லா
கனக்குறை கலக்கக் காரி ருளாய்,வளர்த்த னேவேள்வி.

3) பாயசம் பெற்றதும் பகரொணுக் களிகொண்டு பங்கிட்டான்,
மாயமாய்க் கிடைத்தயிம் மகரளி மாமருந்தை மனைவியர்க்கு!
சேயரை, கோசலை சுமித்திரை கைகேயி பெரும்காலம்,
மாயனும் சங்குசக் ரசேஷனும், புகுந்தரேக ருவினுள்ளே!

4) ஆதித்த னுதித்தனே அவனி,யல அகண்டொளி உதித்ததோ
திரண்டென்று
ஆதியனு தியான்ஹரி அவதரித்தான் அறம்மறை யுயர்த்தவே
ராமனுக!
பேதிக்கும் காலனை காலமாமச் சேஷனும் பிறக்கலக்ஷ் மணனுக,
ஊதிடுமச் சங்கு,சத் ருக்னனுக, உழலுமச் சுதர்சனம் பரதனுனன்!

5) உருவிலே சிறுவனுய், ஓடினு னுடி, ராமசந்த் ரனயோத்தி;
கருணையே உருவதாய் உருவெலாம் கருணை யாய்ரகு குலதிலகன்,
திருநகை மயக்கவே திருவடி தண்டை ஒலிக்கரா கவனெந்தை
மருமுறை பலமுறை அணைந்தபின் மற்றும் முத்திடச்
சொக்குமிவன்!

6) இகமென்னே, ஈடற்ற இதன்தவந்தா னென்னே; அசுரருக்கும்
நன்றிநன்றி;
தகவொளியாய், நீலமேக ஸ்யாமளனுய் தயாப ரனுடலெடுத்
திங்காட!
பகருவெனே பாமரன்யான் சுந்தரனே பாரின் களிசெழிப்பை
பூதேவி
ஜெகக்காப்போன் குதித்தாட, செம்மேனி தன்மே லேவிளைத்துக்
கொட்டினளே!

7) அன்னைஸ்ரீ உதித்தாள் அழகனுடன் லீலைகள் ளியற்ற;
'தன்'நிலையில் நிற்கும் தயைஉள்ளஜ் ஜனகன்தன் மகளாய்;
மண்ணென்றும் காணா, மால்மருவப் பேரெழில்ஜா னகியாய்;
கண்குளிரக் கண்டே னன்றேயான் காணாரேனின் றுமுள்ளம்.

8) மதிநடுங்க மலையுடைத்தெ றிந்து, மலம்வீசி, மறைவேள்வி
பாழ்செய்வோர்;
மதிகலக்கிக் கனலுயர்த்திக் காக்கத் தவராஜ னழைத்துச்சென்
றரக்கர்கள்
சதியொடுக்கிச் சுபாஹுவையு மழித்து இளம்சிங்கப் பெருமான
வன்தம்பி;
நதிமலைபூ வனசாலை வசிக்க கேட்டாரம் மையின்ஸ்வ யம்வரமே!

9) பதிபழிக்கக் கல்லான ரிஷிசதியைப் பாதத்தூ ளொன்றாலே
பெண்செய்து;
மிதிலைமா நகரேகி வில்முறிக்க, மைதிலியாள் காதல்பூ சரம்பூட்ட,
சதிபற்றிக் கோதண்டன், னயோத்திவழி நடக்கப்ப ரசுராமன்
குறுக்கிடவே;
விதிபோல க்ஷத்திரியக் குலமறுப்போன் வீரமழித்
துவீடடைந்தான் வீரமணி!

10) முடிசூட்ட முனைந்திடவே தந்தையான், முன்வினைக் கூனிவம்பி
மூட்டிடவே,
அடிவயிற்றி லப்பொறாமைப் பெருந்தீயை, அறம்மறந் தச்சதியும்
வரம்பிடுங்க,
அடிபணிந்தும் பதியுமவள் ளகற்றுவன மவ்விளம் கதிரையென்
றவமதிக்க,
கடிக்கத்துக் கமாமரவம் தசரதனை, கலங்கிடா மகனகன்றான்
காட்டிற்கே!

11) குஹனைத் தழுவியேநண் புற்றவரின் குற்றேவல் கருளளித்து,
சீதையும்,
அகந்தை யில்லான்நல் லக்ஷ்மணனும், அவன்பின்ன லைந்திடவா
சிரமங்கள்;
மகன கன்றசோகம் மாய்த்திடவே தசரதனை, மனம்கசிந்த
பரதனுக்கு
அகம கிழ்ந்துபாது கையளித்துச், சித்திரகூ டம்முனிவிட்
டேகினானே!

12) விராடனை அழித்தனே! வீரநாத மொலித்துராமன் அரக்கர்
பலகொன்று;
பராபரக் களஞ்சிய ப்ரமோனத் தமிழ்முனி அகத்தியருக்
காடிகொடுத்து;
நிராகரிக் கலக்ஷ்மணன் சூர்ப்பநகை, நித்தியன் கரதூஷ
ணரைக்கொல்ல,
சுராசுரர் நடுங்குபத் துச்சிரத்தான் சூததால் பிராட்டியரை
அகற்றினானே!

13) கருணையம் மழைபெய்யக் காத்திருந்த சபரியாம் காரிகையும்
களித்திடவே,
தருணனெ வர்க்குமெளி தாய்க்கிட்டான் தயைச்சுடர்
அவள்கடித்த கனியுண்டு

பருமலைக் கபந்தனையே பார்நடுங்கப் பொடித்தபின் படுவினையால்
வாடுவோன்போல்,
திருடியோன் நகரெட்டத் திரிந்தானே தீதிலாள் பிரிவாலெம்
பிரான்சிதைந்தே!

14) வானர சேனைத் தலைவன் வணங்கச் சுக்ரீவன் ஆஞ்சநேயன்,
கானக மராம ரமேழும் துளைத்துக் கர்வவாலி கொன்றரசு,
கானக ராஜன் தம்பிக் களித்து அநுமானுக் கணிகலமும்
வானதும் தேடக் கொடுத்தே வினுனே வஞ்சியாள்கோ
மான்வள்ளல்!

15) வாரிதனைத் தாவி வளர்ந்த உடலொடுக்கி வாய்புகுந்த ரக்கியாமன்
நாரிகோர லங்கிணி கிழித்து நாரியர்க்க ரசிஜான கியவளுக்கே
கோரிக்கை விளக்கிக் குரங்கன், கோபித்து வாலிற்கிட் டதீயாலே,
ஓரிடமும் நில்லா திலங்கை எரித்துவந்து முடிமணிதந் தான்களிக்க!

16) மலையுடைக்கும் புயல்காற் றுவீச, மலையுயர் சீறியெழும் அலைபோல,
அலைஅலையாய் பொங்கிக் குதித்தா டுமங்கத வானரசே னைகோடி,
அலையாழி அடக்கி அணைகட் ட,அதிலே றியனைவ ரும்கடந்தே,
தலைபத்தான் தலையூர் தாக்கி அரக்கரின் தலையுருட்டிப்
போர்விளைத்தான்!

17) பற்றிய அநீதிக்கை பத்திரண்டும் அறுக பார்த்தான், கும்பகர்ணன்,
பற்றிய இந்திரன்,வல் இந்திரஜித் தனவர் பதறி உயிரிழக்க;
நற்றவர் நடுங்கச்செய் யுள்ளத்தை நரக வதைசெய் யராமபாணம்,
பற்றினுன் மண்ணையே பரம்மறந்தோன் மண்பெண் ணடிமை
தசகண்டன்!

18) அன்னையை மீட்டி அணைந்தே, தம்பி விபீஷணனுக் கரசளித்து,
விண்ணவரும் மலர்மா ரிசொரிய விமானத் தில்திரும்பி, பரதனுக்குச்
சொன்னபடி காட்சி தந்து சீதை தம்பியனு மானுடனே
விண்மண்ணோர் களிக்க வீர மகுடம் தரித்தரசேற் றுனயோத்தி!

19) அகிலமாண்டான் அளவற்ற களிபொங்க அவித்தை அனலழித்து;
பணிமுடிய,
அகிலமகற் றமாதாவை அரண்யத்திற் கனுப்ப அங்குலவ
குசாளுதிக்க,
வகித்தேநல் பொறுமையாட் சிபாரம்வை குண்டம் ஜானகியாள்
சேர்ந்திடவும்;
நிகிலநிரா காரயோக மியற்றிஞானம் நிலைத்தாத் மாராமன்,
ஏகினுன்விண்!

20) மங்களராமன் போற்றி! மாணிக்க மகுடத்தான் போற்றி!
திங்கள் முகத்தான் போற்றி! தீதிலார் காப்போன் போற்றி!
பங்கம் முறிப்போன் போற்றி! பட்டாபி ராமன் போற்றி!
எங்கும் அருள்வோன் போற்றி! என்னுயிர் ஜோதியான் போற்றி!

(1) துதி

1 பண்டரி அய்யனே

என்று கழியும், பாண்டுரங்கன் திருவடி
பற்று என்னுளம்;
வென்று[1] மிக்கிடும் இவ்வினை,வெந் துமகலாப்[2]
பாழ்மனப் போதை[3]
நின்று, நிலைகொள் ளாதுழற்றிப், பின்னும்
பிறப்பிறப் பிலாழ்த்துதே,
அன்று துகாமணி[4] காத்தபண்டரி அய்யனே,
இன்றுநீ மறந்தலேன்?

---

(1) வாழ்க்கைப் போரில் வெற்றியடைந்து. (2) துக்கத்தால் நொந்தும். (3) சிறு சுக மயக்கம். (4) பக்த துகாராம்.

(2) பஜனை

ராகம்: இஷ்டம்போல் ஆதி தாளம்

	பற்றழி	பற்றழி	—	பண்டரி	நாதா
	பொற்றிரு பாதம்		—	பொறுத்து	நீதாவா (கோஷ்டி)
1.	சிற்றுரு	விடலா	—	சிந்தையில்	புகுவா
	[1]புத்தன்	புரந்தரன்	—	[2]புண்ணியன்	இறைவா (பற்றழி)

(1) போதம் பெற்ற. (2) புரந்தர தாசனுடைய

2.	குற்றம் குறைகள்	—	கூடிய என்னை	
	நற்சுக வழியில்	—	நாட்டிடு வரதா	(பற்றழி)
3.	வற்றிடா ஊற்றும்	—	வாழ, உன் அன்பில்	
	கற்றிடா சுந்தரனுக்	—	கருள்புரி கருணை,	,,
4.	சொற்கள் விளக்கா	—	சோதிச் சாகரா	
	கற்றவர் பற்றிடா	—	நாதமே ஒலிவா	,,
5.	கற்கள் பேரொளி	—	கலங்கள் அணிந்த	
	நற்றிரு ருக்மணி	—	நாதனே வாவா	,,
6.	பற்பல உருவால்	—	பக்தர்கள் காத்தாய்	
	முற்றிலும் அசுரரை	—	முடித்தஎன் மூலமே	,,
7.	இற்றிசை இன்றே	—	இல்லா தெங்கும்	
	கற்றிடக் காணு	—	கலந்த நல்லொளியே	,,
8.	பெற்றவன் நீயே	—	பேரருள் ரங்கா	
	சுற்றமும்—குன்றுச்	—	சுகமும் நீயே	,,
9.	[1]அற்றே சுற்றம்	—	அறுவினை அழித்தவர்	
	[2]அற்றபின் கிட்டிடும்	—	அன்புரு விடலா	

---

(1) சுற்றத்தின் ஆசை அழித்து (2) துறவடைந்த பின்.

10. கண்டம் துண்டமாய் — கம்சனை செய்தாய்
அண்டம் [1]நிரம்பிநில் — [2]அர்ஜுனன் ஹரியே (பற்றழி)

(1) நிரம்பி நிற்கும். (2) அர்ஜுனனுக்கு உபதேசித்த.

11. பண்டரி நாதா — பாண்டுரங்க விடலா
கண்டவர் உன்னை — களியார் [1]இகசுகம் ,,
12. உண்டே உறங்கவோ — உலகில் பிறந்தேன்
பண்டரி கண்டுனைப் — பற்றவே அருள்வா ,,
13. தம்புரா ஜாலர் — தாங்கியே உன்முன்
அன்பரே களிகொண் — டாடும் காட்சியென் ,,
14. விடலா ருக்குமாய் — விடலா ருக்குமாய்
கடக்கும் புவிக்கடல் — கப்பல் கருணு ,,
15. சில்கல் தம்தப் — சிலிர்க்குதென் மெய்யை
நல்லிசை சங்கொலி — நடனமுன் சந்நிதி ,,
16. அருள்ஆலைக் கூட்டமும் — ஆடிடும் பக்தர்
இருளழி பண்டரி — இறைவன் காட்சிபார் ,,
17. எந்தா யினுமுயர் — ஏந்தியோன் கருணை
வந்தா னென்னுளம் — [1]வழிமறந்திழிந்தும் ,,
18. தங்கச் சிகரம் — தங்கிடும் தலம்பார்
பொங்கும் கருணன் — புகுந்தநல் பண்டரி ,,
19. நல்லார் பொல்லார் — நங்கை பாமரர்
எல்லார் தழுவும் — சுந்தர விட்டல்வா ,,

---

(2) ராகம் : இஷ்டம்போல் ஏகதாளம்

1. பண்டரி புரம்பார் — பண்டரி நாதன்
புண்ணியத் தலத்தில் — புங்கவர் எங்கும்பார்
2. அண்டம் பிண்டம் — அவனுள் வாசம்
அன்பின் உரு இவன் — ஆதரவே ரங்கன்
3. பண்டரி கண்ணன் — பாண்டுரங்க விடலன்
பண்புயர் கேசவன் — பார்வதி அண்ணன்பார்
4. தண்டை தங்க — தாளில் சலங்கை
அண்டிட ரங்கன் — அங்கத்தில் புளகம்
5. முக்தி உருவை — மூலத்தை கட்டியே
பக்தர் கோடிகள் — பாடுரூர் ராப்பகல்
6. ஜெய்ஜெய் விடலா — ஜெயரங்க விடலா
பண்டரி விடலா — பண்பளி சுந்தரன்
7. பண்டரி வாசனே — பாசங்கள் நாசனே
கண்டபின் மோக்ஷமே — காண்பீர் உளத்தினுள்
8. கண்டத்தில் மாலை — கண்களில் கருணை
[1]'புண்ணிய' வெண்ணெயை— புசிக்குமுன் ரங்கன்

(1) புண்ணியம் என்ற வெண்ணெயை.

9. பண்டரி விடலனின் — பரம்தரும் மார்பும்
குண்டலமாய்த் தொங்கும் — கோபிகள் அன்பைப்பார்

10. கொண்டையில் பூமுத்து — கௌஸ்துப தாரிபார்
அண்டையில் ருக்மணி — அஷ்டமா சித்திகள்

11. ஸகஸ்ர நாமக்கற்கள் — சாற்றிய ரங்கன்
அகந்தையை அறைத்துப் — பூசிய ஆனந்தன்

12. அபயக் குடையும் — அதன்கீழ் பக்தரும்
தபசெனும் தடிகொண்டே — தகர்க்கும் ரங்கன்பார்

13. நோகாத உள்ளன் — நொந்தவர் ரங்கன்
ஆகாத தேதில்லை — அறம்பற்றிக் கூவ

14. முகுந்த மாதவன் — மோகன ரங்கன்
வைகுண்ட மாலிவன் — வையக வாசன்

15. கோவிந்த ஹரி இவன் — கோப்ரம்ம காவலன்
நாவின் சுகமிவன் — நாமங்கள் உரைப்போர்க்கு

16. அபலை ஜனாபாய் — ஆதரித்தான் சக்குபாய்
தபசற்ற மீராவை — தாங்கிநின்ற கண்ணன்

17. துகாராம் ஏகநாத் — தூயநல் சூர்தாஸ்
ஜெயதேவ் போஜலர் — நாமதேவர் விடலன்

18. அசல நிச்சல — ஆனந்த ரங்கன்
குசலர் நேயன் — கோரகும்ப ரண்ணல்.

பகுதி [5] ஸ்ரீ கோபால கோவிந்தம்

(1) ஸ்ரீ க்ருஷ்ணாஷ்டோத்தரம்

1. ஓம் அர்ஜுனப்ரியாய நம:
2. ,, அஜிததத்வாய நம:
3. ,, அதர்ம நாஸனாய நம:
4. ,, அபயப்ரதாயினே நம:
5. ,, அமராய நம:
6. ,, அவித்யா ஹந்த்ரே நம:
7. ,, அசுர குலாந்தகாய நம:
8. ,, ஆனந்தாய நம:
9. ,, உத்தமாசார்யாய நம:
10. ,, ஐஸ்வர்யாய நம:
11. ,, கம்ஸ மர்த்தனாய நம:
12. ,, கர்த்ரே நம:
13. ,, அகர்த்ரே நம:
14. ,, கர்மயோகப்ரதாய நம:
15. ,, கர்மாதீதாய நம:
16. ,, கருணாஸாகராய நம:
17. ,, காமினீகாஞ்சன வர்ஜிதாயநம:
18. ,, காருண்ய சக்ஷுஷே நம:
19. ,, காளீய மர்த்தனாய நம:
20. ஓம் கிரிதராய நம:
21. ,, கீதாம்ருத தாயினே நம:
22. ,, குண்டல தாரிணே நம:
23. ,, குந்தி பூஜிதாய நம:
24. ,, கேஸவாய நம:
25. ,, கோகுல தீபாய நம:
26. ,, கோபாலாய நம:
27. ,, கோபிகா வல்லபாய நம:
28. ,, கோபிகாவஸ்த்ராப ஹாரிணே நம:
29. ,, கோவிந்தாய நம:
30. ,, கௌரவகுலாந்தகாய நம:
31. ,, கௌஸ்துபதாரிணே நம:
32. ,, சாஞ்சல்ய நாசிணே நம:
33. ,, ஞானதாயிணே நம:

34. ஓம் ஞானயோகநிதர்ஸகாய நம:
35. ,, த்ரிகுணதீ தாய நம:
36. ,, துளஸீமாலாலங்ருதாய நம:
37. ,, தேஜோ ரூபாய நம:
38. ,, தஸாவ தாராய நம:
39. ,, துஷ்டநிக்ரஹாய நம:
40. ,, தேவகிபுத்ராய நம:
41. ,, தர்மரக்ஷகாய நம:
42. ,, நந்தகோபாய நம:
43. ,, நரஸுர பூஜிதாய நம:
44. ,, நவநீத சோராய நம:
45. ,, நவவித ப்ரேமாஸ்பதாய நம:
46. ,, நவரத்ந லங்க்ருதாய நம:
47. ,, நித்யாய நம:
48. ,, நித்யத்ருப்தாய நம:
49. ,, நித்ய ப்ரம்ஹசாரிணே நம:
50. ,, நிர்குணய நம:
51. ,, நிர்மலாய நம:
52. ,, நிரஹங்காராய நம:
53. ,, நிஷ்களாய நம:
54. ,, ப்ரேமரூபாய நம:
55. ,, பரதத்வாய நம:
56. ,, பரமபாவஞய நம:
57. ,, பாண்டவரக்ஷகாய நம:
58. ,, பார்த்த ஸாரதயே நம:
59. ,, பீதாம்பர தாரிணே நம:
60. ,, பூதந ஸம்ஹாரிணே நம:
61. ,, ப்ருந்தாவன லோலாய நம:
62. ,, பக்த ரக்ஷகாய நம:
63. ,, பக்த ஹ்ருத்வாஸினே நம:
64. ,, மங்களாய நம:
65. ,, மதுரா நாதாய நம:
66. ,, மதுர பாவ விலாஸாய நம:
67. , மதுர பாஷிணே நம:
68. ,, மதுஸூதனய நம:
69. ,, மந்தஸ்மிதாய நம:
70. ,, மனோ ஹராய நம:
71. ,, மஹாயோகினே நம:
72. ,, மாதவாய நம:
73. ஓம் மாயாவினே நம:
74. ,, மாயாநாஸினே நம:
75. ,, முகுந்தாய நம:
76 ,, முனிபுங்கவரர்ச்சிதாய நம:
77. ,, முராரயே நம:
78. ,, மௌனினே நம:
79. ,, யஞ்ஞப்ரியாய நம:
80. ,, யதுகுலதிலகாய நம:
81. ,, யதுகுலாந்தகாய நம:
82. ,, யமுனுதீரலீலா விநோதினே நம:
83. ,, யஸோதா கிஸோராய நம:
84. ,, ராஜ வித்யா, ராஜகுஹ்ய ராஜ யோக விமர்ஸகாய நம:
85. ,, ராஜாதி ராஜாய நம:
86. ,, ராதா காந்தாய நம:
87. ,, ராதா க்ருஷ்ணய நம:
88. ,, ராஸக்ரீடா ஸக்தாய நம:
89. ,, ருக்மணீ நாதாய நம:
90. ,, லீலாவிநோதினே நம:
91. ,, வஸுதேவஸ்ஸுதாய நம:
92. ,, வித்யாரூபாய நம:
93. ,, விஸ்வப்ரியாய நம:
94. ,, விஸ்வரூபதர்ஸகாய நம:
95. ,, விவேகஸாகராய நம:
96. ,, வேணுகானம்ருத விலாஸினே நம:
97. ,, வேதஸ்வரூபாய நம:
98. ,, ஸ்ரீபதயே நம:
99. ,, ஸத்யாய நம:
100. ,, ஸத்யவசனம்ருதாய நம:
101. ,, ஸர்வாந்தர் யாமிணே நம:
102. ,, ஸித்தாய நம:
103. ,, ஸிஷ்ட பரிபாலனய நம:
104. ,, ஸுதாமப்ரியாய நம:
105. ,, ஸ்யாமள ரூபாய நம:
106. ,, ஸகடாசுர ஸம்ஹாரிணே நம:
107. ,, ஸிஸுபாலவைரிணே நம:
108. ,, ஸுந்தர க்ருஷ்ணய நம:

(2) துதிகள்

ராகம்: நாதநாமக்ரியை 'குஞ்சவிகாரி' தாளம்: சாப்

1)	ஸாஸா	ஸாஸஸ	ரீ ரிரி	ரி ஸ நீ
	அஞ்சல்	கூவுமுன்	ஆண்டிடும்	கண்ணன்
	ஸ ரீ ரி ரீ	கரிரீ	ரிகரிஸ	ரீ ரீ
	கொஞ்சொலி	முரளீ	கோகுல	லோலன்
	ரீரிரி	கமபா	பாபப	மகரீ
	சஞ்சல	நாசன்	ஸ்யாமள	ரூபன்
	காகக	காகரி	ஸரிஸநி	ஸரிரீ
	குஞ்சவி	ஹாரி	குண்டல	தாரீ
1)	அஞ்சல்	கூவுமுன்	ஆண்டிடும்	கண்ணன்
	கொஞ்சொலி	முரளி	கோகுல	லோலன்
	சஞ்சல	நாசன்	ஸ்யாமள	ரூபன்
	குஞ்ச	விகாரி	குண்டல	தாரி
2)	மங்கள	கோமள	மந்த	ஹாஸன்
	தங்குவான்	ப்ரேமை	ஹ்ருதயத்தி	னுள்ளே
	நஞ்சன்	காளியன்	மர்த்தனன்	மோகனன்
	தஞ்சம்	கொடுப்பான்	தரணீ	தரனிவன்
3)	சுந்தரி	கோபியர்	சுந்தரக்	கள்ளன்
	நந்த	கோபனின்	நவரஸ	லீலையன்
	கொன்ருன்	கம்ஸனை	கௌஸ்துப	தாரிஇவன்
	வந்தான்	சுந்தரன்	பாசத்தை	யழித்தே
4)	ஹரிஹரி	கோவிந்தன்	ஹரிஹரி	மாதவன்
	கிரிதர	கோபால	க்ருஷ்ண	முராரி
	திரிவனே	ப்ருந்தை	திவ்ய	வனத்தில்
	முறிப்பான்	மாயையை	முகுந்த	ஸ்ரீபதி
5)	ராதையின்	காந்தன்	ராதா	க்ருஷ்ணன்
	ராதையின்	ஜீவன்	ராதையின்	மனமிவன்
	ராதையின்	ப்ராணன்	ராதையின்	உடலிவன்
	ராதையின்	சுகமிவன்	ராதையின்	நாதன்
6)	சந்தணம்	பூசிய	சரங்களும்	அணிந்த
	கந்த	மாலைகள்	கண்ணில்	மையும்
	தங்கச்	சலங்கை	சொகுசு	பீதாம்பரம்
	அங்கம்	புளகம்	ஆகுதே	நினைத்தால்
7)	தகதக	த்ரேகம்	'தங்!சல்!'	ஆட்டம்
	முகத்தில்	வஸ்யம்	முரளி	கையில்
	இகத்தில்	எங்கும்	இல்லா	சுகரூபன்
	மரகதம்	முத்துநல்	மகுடம்	மணிந்தவன்
8)	கோவிந்த	கோவிந்த	கோவிந்த	கேசவன்
	கோவிந்த	நரஹரி	கோவிந்த	முரஹரி
	நாவினல்	கூவி	நாட்டிடு	உளத்தில்
	தேவிய	சோதையின்	தெய்வப்	பாலனே!

(3) கோஷ்டி கீதம்

1. ராகம் : மாயமாளவகௌளா — தாளம் : ஆதி

பல்லவி

மா ம ம ம   மமமக   க ம ப த   பமகக
கோகுல   கிரிதர   — கோவிந்த   மாதவ
தா த த   தா த த   ப தபம   பா பா
வேகுரேன்   கண்டிட   — வேகமாய்   வாவா

அநுபல்லவி

பாப த   த ஸி ஸ் ஸ்   ஸ் ஸி ஸ் ரி   ஸ் ஸி த ப
ஆகுமோ   தனித்திவன்   -- அணைந்திட   மறந்திகம்
தா த த   ப த த த   பா ம பா
வைகுண்ட   கதைதரி   — வையகம்

பல்லவி

கோகுல   கிரிதர   — கோவிந்த   மாதவ
வேகுரேன்   கண்டிட   — வேகமாய்   வாவா

அநுபல்லவி

ஆகுமோ   தனித்திவன்   — அணைந்திட   மறந்திகம்
வைகுண்ட   கதைதரி   — வையகம்

(கோகுல)

சரணம்

ஆகுஞ்ச   விஹாரி   — அபயமுராரி
ஓகுண்டல   தாரி   — சுந்தரமாலி
போகுமோ   இனிஉடல்   -- புனிதப்ருந்தாவனம்
நோகுரேன்   நினைத்திவன்   — ராதையான்

---

2. ராகம் — ஹரிகாம்போதி — ஏக தாளம்

ஸதஸரிகா - -   கா கா கா - -   மாமாமாகரி   ரி க கரி ஸா - -
கோபாலா - -   கோவிந்தா   வாவாவா   கார்வண்ணு - -
மாமாமா - -   கமபாபா - -   தாதாதஸிஸித   பதபமபா - -
ஓ பாலா   ஸ்ரீநாதா   ஓடாதே   உள்ளம்வா
பாபாதஸிஸா   ஸ்ஸிதாபா - -   மாபாபமகா   கமகரிஸா - -
மாபாவம்   அழிவாஓ   மாதவா   கிரிதரா
கோபாலா   கோவிந்தா   —   வாவாவா   கார்வண்ணு

1) ஓபாலா   ஸ்ரீநாதா   —   ஓடாதே   உள்ளம்வா
2) மாபாவம்   அழிவாஓ   —   மாதவா   கிரிதரா
3) பூபாரம்   தாங்கிடும்   —   பூதேவி   நாதாவா
4) ஆபாச   ஆசைகள்   —   அழித்துவா   அன்புருவாய்
5) காளீய   மர்த்தனு   —   காத்திடு   துறவொளியால்
6) ராதையின்   காதலா   —   ராப்பகலாய்   நினைந்தேன்வா
7) மோஹனு   கோபிகள்   —   முத்திடும்   கண்ணுவா
8) சுந்தரா   முத்திட்டு   —   அணைந்திடு   கோபியெனை

3. ராகம் : மோகனம் ஏக தாளம்

	க கா க	காரிரீ		ரி கபக்	பாபப
1)	கோபால	மாதவ	—	கோவிந்த	கேசவ
	காபாத	தாதப		பதஸ்த	ஸ்ாஸ்ஸ்
	பூபால	வா வா	—	புங்கவர்	ஹரிஹரி
	கா க்க	காக்ரி		ஸ்ாரிஸ	தாஸஸ
2)	அச்சுத	மெய்ச்சுக	—	ஆனந்த	நந்தனு
	தாரீ	ஸ்ாதப		பதஸதப	கரிஸா
	சத்சித்	சின்மய	—	ச ங் க ட	நாஸா
1)	கோபால	மாதவ	—	கோவிந்த	கேசவ
	பூபால	வாவா	—	புங்கவர்	ஹரிஹரி
2)	அச்சுத	மெய்ச்சுக	—	ஆனந்த	நந்தனு
	சத்சித்	சின்மய	—	சங்கட	நாஸா
3)	முரஹரி	முகுந்தா	—	முரளீ	தரவா
	அறநரர்	அபயா	—	அண்டங்கள்	ரக்ஷகா
4)	நர	நாராயண	—	ஹரி	நாராயண
	வர	நாராயண	—	ஸ்ரீ	நாராயண
5)	பதும	நாபா	—	பரம	புருஷா
	பதும	நாதா	—	பரம	கீதா
6)	ஸ்ரீதர	சித்சுக	—	ஸ்ரீனி	வாசா
	கிரிதர	க்ருஷ்ணு	—	சகடன்	மர்த்தனு
7)	நிரந்தர	நிர்மல	—	நித்யா	னந்தா
	அரனுர்	உள்ள	—	ஹரிஹரி	தேவா
8)	கோபிகள்	லோலா	—	கோகுல	பாலா
	பாபிகள்	நாசா	—	பக்தருள்	வாசா
9)	கமலக்	கண்ணு	—	காண்டிவன்	நேயா
	சுமங்கள	சுகம்தரும்	—	சுந்தர	பூஜிதா

4. ராகம்: மாயமாளவகௌளா ஏகதாளம்

	மா ம ம	மமகா		க ம ப த	ப ம பா
1)	கோவிந்த	ஹரிவா	—	குண்டல	தாரிவா
	தா த த	தாதப		ப த ப ம	பாபா
	ஆவியாய்	நீஎனை	—	ஆண்டிடு	வாவா
	பாபத	நீஸாஸா		நிஸரிஸ	ஸநிதப
2)	தாவிநீ	கிளிகள்	—	தண்டைகள்	குலுங்க
	தாத ப	தா த ப		பதபம	பபபா
	கூவினுய்	வேணுவால்	—	கோகுலம்	மயக்கி
1)	கோவிந்த	ஹரிவா	—	குண்டல	தாரிவா
	ஆவியாய்	நீஎனை	—	ஆண்டிடு	வாவா
2)	தாவிநீ	கிளிகள்	—	தண்டைகள்	குலுங்க
	கூவினுய்	வேணுவால்	—	கோகுலம்	மயக்கி
3)	சிவியென்	பாசங்கள்	—	சித்தத்தில்	அணைந்து
	நாவினில்	ஹரிஹரி	—	நாமமாய்	நின்றிடு
4)	தேவியர்	கோபிகள்	—	தெய்வமே	அணைந்தவா
	பாவியான்	கோபியே	—	முத்திடு	மாதவா

5)	பார்வா	காவா	—	பாதம்	தாவா
	நீரும்	பால்போல்	—	நினைவில்	கலவா
6)	மேவினின்	றென்றும்	—	மெய்மனம்	யாவும்
	கூவினேன்	கோகுல	—	கிரிதர	வாவா
7)	பூவினுல்	பொன்மணி	—	ஒளிக்கும்	பட்டால்
	அலங்க்ருத	சுந்தரா	—	அன்பால்	ஆள்வா
8)	தாவிட	புவிக்கடல்	—	தஞ்சம்	தந்திடு
	காவிகள்	தாடிகள்	—	காணு	ப்ரபுவே

---

5. ராகம்: கல்யாணி — ஏக தாளம்

	ஸ்ஸ்ஸ்ஸ்	நீ நி த		தநிஸ்நி	த ா ப ா
1)	தந்திர	மந்திர	—	சுந்தர	கண்ணன்
	மா பத	ப த நீ		பா த நீ	ஸ்ாஸ்ா
	கொண்டிடு	அன்பால்	—	கொன்றுளம்	பாசம்
	நிஸ்ரீரீ	ரிரிரிரி		ஸ்ரிக்ரி	ஸ்ாஸ்ஸ்
2)	அண்டிடு	அன்பனை	—	அசுரரின்	காலனை
	ஸ்ரிநீநீ	நிஸ்தத		ஸாநித	ம ப த நி
	விண்டுநீ	ஆசைகள்	—	வீரத்	துறவால்
1)	தந்திர	மந்திர	—	சுந்தரக்	கண்ணன்
	கொண்டிடு	அன்பால்	—	கொன்றுளம்	பாசம்
2)	அண்டிடு	அன்பனை	--	அசுரரின்	காலனை
	விண்டுநீ	ஆசைகள்	—	வீரத்	துறவால்
3)	தின்ருன்	திருடியே	—	தீதிலோர்	அன்பை
	வென்றே	கொன்று	—	வீழ்த்தும்	அறுவினை
4)	நந்தனின்	பாலன்	—	நவநீத	சோரன்
	சிந்தைக்	கள்ளன்	—	சிறுசுக	நாசன்
5)	மந்தன்	எந்தனை	—	மாதவன்	அணைந்தான்
	பந்தம்	பொடித்து	—	பாற்கடல்	சயனன்
6)	எந்தனை	நிந்தனை	—	செய்வோர்	வியக்க
	வந்தணைந்	துள்ளம்	—	வாழ்ந்திவன்	மயக்குருன்

---

6. ராகம்: பைரவி. — தாளம்: ஏகம்

	தநிஸ்ரி	ரிக்ரிஸ்		ஸ்நிரிஸ்	நிதபப
1)	நந்தனு	நந்தனு	—	நர்த்தனு	எந்தனை
	தநிஸ்ஸ்	ஸ் நி த ப		ப ம ம ப	ம க ரி ரி
	வந்தணை	கொஞ்சிநீ	—	நோவா	தென்னுளம்
	த நி நி த	தநிநித		த நி ஸ நி	த ா ப ா
2)	மந்திரம்	தந்திரம்	—	மாயைகள்	செய்வாய்
	பமப த	ப ம க ரி		ரி க ம ப	ப த ப ா
	மந்திரம்	அறியான்	—	அன்பிற்கே	வாவா
	ரீ ரி ரி	ரீ ரீ		ரிக்மா	க்ரிஸ்ஸ
3)	குஞ்ஜவி	ஹாரி	—	கோதை	ராதையின்
	ஸ் நி ரி ஸ்	ஸநிதபா		ஸ நி த ப	ம க ரி ரி
	கொஞ்சும்	மோஹனு	—	கெஞ்சினேன்	முத்திடு

1)	நந்தனா	நந்தனா	—	நர்த்தன	எந்தனை
	வந்தணை	கொஞ்சிநீ	—	நோவா	தென்னுளம்
2)	மந்திரம்	தந்திரம்	—	மாயைகள்	செய்வாய்
	மந்திரம்	அறியான்	—	அன்பிற்	கேவாவா
3)	குஞ்ச	விஹாரி	—	கோதை	ராதையின்
	கொஞ்சும்	மோஹனா	--	கெஞ்சினேன்	முத்திடு
4)	வஞ்சனை	கம்சன்	—	வதைத்துக்	காத்த
	தஞ்சமே	மதுரை	—	சென்றதென்	மோசம்
5)	ப்ருந்தா	வனத்தின்	—	சுந்தர	கோமள
	தந்திடு	மதுர	—	அதரம்	பருக
6)	மந்தை	கோகுல	—	மாடுகள்	வாடுது
	உந்தன்	கானம்	—	கேளா	தெங்கும்
7)	கந்தமா	தங்க	—	மலர்களும்	கொடிகளும்
	கண்ணனை	சுற்றிட	—	கதறுதே	வாவா
8)	எங்களை	மயக்கிபின்	—	எங்கோ	செல்வது
	எவ்வகை	நீதியோ	—	இதுதான்	காதலோ
9)	தங்கிடா	உன்கரம்	—	எங்கள்	மேனியும்
	மங்கியே	வாடி	—	மாய்குதே	கண்ணா
10)	பொங்கிடும்	ப்ரேமை	—	பொசுக்குதே	எம்மை
	கொங்கையர்	செய்ததோர்	—	பிழையென்	சொல் நீ
11)	வந்தான்	வந்தான்	—	வந்தான்	மோகனன்
	எந்தன்	சிந்தையுள்	—	என்றுமே	களிக்க

---

7. ராகம்: தன்யாஸி தாளம்: ரூபகம்.

	பா பா ப	த நி தா		ப பா த	த நி ஸ்ா
	கோபால	க்ருஷ்ணா	—	கோ குல	க்ருஷ்ணா
	த நி ஸ்ா ஸ்ா	நி த பா		ம ப தா த	ம க ரீ ஸ
	ஓ பாலா	ந ந் தா	—	உள்ளத்தில்	ந டி வா
1)	கோபால	கிருஷ்ணா	—	கோகுல	கிருஷ்ணா
	ஓபால	நந்தா	—	உள்ளத்தில்	நடிவா
2)	ப்ருந்தாவன	லோலா	—	ப்ருந்தையின்	முக்தா
	வந்தணை	எந்தனை	—	வாதிடா	தோடிவா
3)	கள்ளாயென்	கண்ணா	—	கட்டித்தா	முத்தம்
	உள்ளத்தில்	வெள்ளமாய்	—	உனதன்பு	பெருக
4)	குழலெங்கே	கண்ணா	—	கோதைக்கே	தொனிவா
	அழஅழச்	செய்யாதே	—	அழகல்ல	சுந்தரா
5)	அடித்ததை	மறவா	—	அவலிதோ	தருகிறேன்
	கடித்தாலும்	பல்லால்	—	களிகொள்வேன்	வாவா
6)	உடைத்ததும்	கோபிகள்	—	ஓட்டையிட்டு	பானைகள்
	தடையேதும்	செய்யேன்	—	தள்ளிநிற்க	சொல்லேன்
7)	கட்டாத	கைகளும்	—	சோர்ந்ததே	கண்ணா
	திட்டங்க	ளிடேன்	—	திட்டேனினி	குட்டேன்
8)	ஸ்தன்யங்கள்	சுரக்குது	—	சீக்கிரம்	குடிவா
	அன்னையான்	கண்ணே	—	மடிமேலமர்	வா

---

8. ராகம்: சங்கராபரணம் ''ஸ்ரீ க்ருஷ்ண த்வாதசம்'' தாளம்: ஏகம்

	ஸா ரி ரி	கா கா	ரீ க க	கா – ம க
1)	கோவிந்த	க்ருஷ்ண	கோகுல	க்ருஷ்ண –
	ரீ க மா	ரீ கா ம	ரீ கா ரி	ஸா ஸா
	கோவிந்த	கோவிந்த	கோபால	க்ருஷ்ண
	கா ம ப	த நீ த	நீ ஸ் ஸ்ா	ஸ்ா ஸ்ா
2)	ஆ வி நீ	க்ருஷ்ண	ஆனந்த	க்ருஷ்ண
	நீ நீ நீ	நீ தா நீ	ஸ் ஸ் ரீ	ஸ் நி ஸ் ா
	அன்புடன்	வந்துளம்	ஆ டு நீ	க்ருஷ்ண
	ஸ் ரீ க்ா	க்ா க்ா	க்ா க் க்	ம்ா க்ா
3)	முகுந்த	க்ருஷ்ண	மோஹன	க்ருஷ்ண
	ரி க்ா ம்ா	ரி க ம்ா	ரி கம்ா க	ரீ ஸா
	முத்திட்டு	கட்டிக்கொள்	முரஹ ரி	க்ருஷ்ண

1)	கோவிந்த	கிருஷ்ண	கோகுல	க்ருஷ்ண	
	கோவிந்த	கோவிந்த	கோபால	,,	(கோவிந்த)
2)	ஆவி நீ	க்ருஷ்ண	ஆனந்த	,,	
	அன்புடன்	வந்துளம்	ஆடு நீ	,,	,,
3)	முகந்த	க்ருஷ்ண	மோஹன	,,	
	முத்திட்டு	கட்டிக்கொள்	முரஹரி	,,	,,
4)	ஸ்ரீதர	க்ருஷ்ண	ஸ்ரீஹரி	,,	
	சித்தத்தை	சுத்திசெய்	ஸ்ரீபதி	,,	,,
5)	நரஹரி	க்ருஷ்ண	நாரண	,,	
	நாதனே	நாட்டிடு	ப்ரேமையில்	,,	,,
6)	சுரர்முனி	க்ருஷ்ண	சுகரூப	,,	
	சுந்தர	னெந்தனே	ஆதரி	,,	,,
7)	நந்தனின்	க்ருஷ்ண	நல்லோரின்	,,	
	நாரியர்	கோபியர்	கள்ளனே	,,	,,
8)	அங்கம்மேல்	சுந்தர	அணிகல	,,	
	முடிமணி	துளசிபூ	முரளிகை	,,	,,
9)	கஞ்சமேன்	க்ருஷ்ண	காதலா	,,	
	கட்டிநீ	மருவியே	சுகம்தர	,,	,,
10)	ப்ருந்தையில்	க்ருஷ்ண	புளக்கெழ	,,	
	போதையுன்	அன்பிலே	புதைத்தஎன்	,,	,,
11)	வந்திடு	க்ருஷ்ண	வாடுரேன்	,,	
	வந்தென்னுள்	கொஞ்சி நீ	வாழ்ந்திடு	,,	,,
12)	சகடன்	கம்சன்	சம்ஹார	,,	
	சஞ்சலம்	மாயையு	மழித்திடு	,,	,,

9. ராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

க ம க ரீ க ரி ஸ நி த தா ஸா ம ம ம ம க ம பா க ப ம க ரீ
மதுரா புரி வாசன் — மல ருள மு ர ளீ த ர னி வ ன்

சரணம்

ம ம ம ம கா ம பா பாபா தா த த தா நி த மா ப ப
குதூகல கோமளன் ஹ ரி — கோவிந்த மாதவன் கேசவன்

பல்லவி

மதுரா புரிவாசன் — மலருள முரளீதரனிவன் [கோஷ்டி]

சரணம்

1) குதூகல கோமளன் ஹரி — கோவிந்த மாதவன் கேசவன்
2) ராதையின் ஸ்யாமளன், என் — ராஜகோபாலன் க்ருஷ்ணன்
3) யமுனாதீர விநோதன் — யதுகுல திலகவதாரன்
4) நவநீத சோரன் கிரிதர — நவ மன்மதா காரன்
5) ப்ருந்தாவன சோரன், அ — ப்ருந்தை கோபிகள் லோலன்
6) கம்சனைக் கொன்ற தீரன் — கருணன் கமலக் கண்ணன்
7) காளீய மர்த்தனன் கோபன் — கவச குண்டல ஸ்ருங்காரன்
8) சுந்தர கோபியின் நாதன் — சொகுசு பீதாம்பர லங்காரன்
9) மங்களா சரண்சரண் ஸ்யாமளா— மயக்கிடும் வதனாலை காத்திடு.

---

10. ராகம்: சங்கராபரணம் மத்யமச்ருதி தாளம்: ஏகம் அல்லது ஆதி

1) கண்ணனைக் கண்டீரோடி, என் — கள்ளக் காதலன் கண்டீரோடி
2) கமல நாபனைக் கண்டீரோடி — காளீய மர்த்தனைக் கண்டீரோடி
3) கவச குண்டலன் கண்டீரோடி — கௌஸ்துப தாரியைக் கண்டீரோடி
4) ப்ருந்தையில் சுந்தரன் கண்டேனடி, — ப்ருந்தாவனம் ஒளிந்தானோடி
5) குழலோசை கேட்குதடி கோபி, — கோகுலன் கண் காணேனடி
6) மலர்களும் வாடுதடி, அந்தோ— மதிஒளி வாட்டுதேடி
7) புளகமும் ஆகுதேடி, அப் — புனிதனும் வாரானோடி
8) கண்ணா உனைப் பற்றினேனே — கணமும் யான்பிரியேன் இனி.

ராகம் : புன்னாகவராளி தாளம் : ஆதி

பல்லவி

ஸஸரீஸ நநிநீநீ ஸஸ ஸஸரிகா ம ம மம
யதுகுல திலகனாய் உதித்தங்கே நீ — யஞ்ஞங்கள்
மகரீஸ சரிநீஸா
தவங்கள் செய்தறியா

மமமாம மமமாம கமபாமபா பாதாதா
குதித்தாடிக் களித்தாயே ஏழைகளை — கொண்டாரே
தபமகரீ ஸரிகா ரிஸா
எக்கல்வி பூஜை கண்ணா

அனுபல்லவி

ம ம மா ம ம ம மா ம மமமாமபா தததாத தததாத
மதுமோனம் குடித்தநல் முனிகளுமே— மதுரஸ கோபியாய்
பதபாமாபா
வந்தாரேனோ

பபபாப பதஸ்ஸாஸ் நிஸ் ரீஸநிதபா மபதா த
எதுவுமே அறியா இச் சுந்தரனை— எப்போ நீ
தபாமகாரி ஸரிகாரிஸா
கூடியே ஆடிடுவாய்.

பல்லவி

யதுகுல திலகனாய் உதித்தங்கேநீ —
யஞ்ஞங்கள் தவங்கள் செய்தறியா

குதித்தாடிக் களித்தாயே ஏழைகளை—
கொண்டாரே எக்கல்வி பூஜை கண்ணா?

அநுபல்லவி

மதுமோனம் குடித்தநல் முனிகளுமே—
மதுரஸ கோபியாய் வந்தாரேனோ

எதுவுமே அறியா இச்சுந்தரனை—
எப்போநீ கூடியே ஆடிடுவாய்

சரணம்

புதுவழி உனைப்பற்ற என்ன செய்வேன்—
போதாதோ காணவென் றலறினாலோ

எதுதவம் கண்ணாசொல் கோபிசெய்தார்—
எல்லாமே அன்பாகி உன்னைக் கண்டார்

இதுஅது என்றென்னை ஏமாத்தாதே—
இகமெல்லாம் நீயாக நிறைந்திடுவா

விதுரனின் கூழ்கொண்ட என்கள்ளக்கண்ணா—
விட்டிடேனுன்னை விரைந்தோடி வாவா,

(4) அஷ்டாக்ஷர கும்மி

1) **ஓம்**கார மத்தியில் மாதவன் சித்துரு—
உள்ளத்தில் தரித்து நின்றிடவே
ஹ்ரீங்கார நாதத்தின் இன்னிசை ஒலிக்க—
ஹ்ரிஷீகேசனும் சிரித்தருள்வான்

2) **ந**ந்தனின் பாலனாய் நாரணன் வளர்ந்தான்—
நதிதீர யமுனை கோகுலத்தில்
என்னென்ன திருட்டு ஆட்டங்கள் ஆடினான்—
எல்லோரும் மயங்கி காதல்கொள்ள

3) **மோ**கித்தான் கோபிகள் மாடுகள் கோபர்கள்—
மோகன வேணுவை ஊதியங்கே
ஆகியே கோபியாய் அணைந்து முத்திட்டேன்—
ஆஹாஹா இச்சுகம் என்ன சொல்வேன்

4) **நா**கமக் காளியன் கக்கிய விஷத்தை—
நடுங்கச் செய்தங்கே நின்றானடி
போகவே நாகத்தின் கொழுப்பும் விஷமும்—
பூதகி கொன்றவன் ஆடிவென்றான்

5) **ரா**தையும் கண்ணனும் ஆடுதல் கண்டாயா—
ராதையின் காதலுக் கீடுளதோ
பேதையான் சுந்தரன் சுகிப்பேன் ராதையாய்—
பெய்யுமோ சொல்மழை செப்பஇதை

6) **ய**திகள் முனிகள் என்றுதான் பாராது—
யாகங்கள் அசுரர் கலைத்து வந்தார்
பதியாம் ஸ்ரீக்கு எட்டிட இன்னல்கள்—
பன்னகன் காக்கவே கண்ணனானான்

7) **'ணா'**வென்ற அட்சரம் எட்டிலே ஒன்றேடி—
நாதத்தைக் கொடுக்க நிற்குதடி
தாவென்றே எட்டிதை சத்குரு பற்றிட—
தாண்டுவோய் பிறப்பு வண்ணன் பற்றி

8) **ய**ஞ்ஞங்கள் தவங்கள் செய்வோரும் விட்டதை—
யதுகுல திலகனை எட்டவந்தார்
அஞ்ஞானம் அழித்தென்னை ஆளுரான் உள்ளத்தில்—
அச்சுதன் கண்ணனிக் கேசவனே.

சுபமஸ்து

ஓம் தத் சத்.

தேவ ரகஸியம் என்று தமிழர் கருதும்



ஆனந்த ரகஸ்யம்

(ஆசிரியர்: ஸ்ரீ சுந்தரம்)

[பதிமூன்றும் பதிப்பு
பெரிதாக்கப் பட்டுள்ளது]

**17000-பிரதிகளுக்கு மேல்
இது வரை
விற்பனையாகப்பட்டுள்ளன.**

200—பக்கங்கள்
50 —ஆர்ட் படங்கள்

நோயால் வதைந்து, சிதைந்த ஆயிரக் கணக்கான தமிழர்களுக்குப் புத்துயிரளித்து, புது வாழ்க்கையை அமைத்துக் கொடுத்த அபூர்வ நூல். இருபத்து ஐந்து ஆசனங்கள் படங்களுடன் விவரிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு ஆசனமும் செய்யும் விதம், ஸ்வாசக் கட்டுப்பாடு முதலியன ஹாஸ்யம் ததும்ப, படிப்போர் உள்ளம் உற்சாகம் பெற்று, உடனே பயிற்சி செய்ய காந்தம் போல் இழுக்கும் உன்னத நூல். நாடி சுத்தி, பிராணாயாமம், பெண்கள் பயிற்சி விரிவாக எளிய சொற்களில் விவரிக்கப் பட்டுள்ளன.

"....விஷயத்தை எடுத்துச் சொல்லும் திறமையோடு **ஸ்ரீமான் சுந்தரம்** அவர்களுடைய தமிழ் நடையும் என் மனதைக் கவர்ந்தது. தமிழ் மக்கள் உடல் நலமும், மனோ பலமும் பெறுவதற்கு இந்தப் புத்தகம் உதவியாக இருக்குமென்று நம்புகிறேன்...." என தமது முன்னுரையில் **சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்** கூறுகிறார்.

விலை ரூ. 3—8—0 **தபால் செலவு அணா 8.**

THE YOGA PUBLISHING HOUSE, B'LORE-1.